அனைத்து மோட்டார் வாகனங்களினதும் 2018.01.01 ஆம் திகதியன்று மீள் மதிப்பீட்டுப் பெறுமதி ரூ.27,400,000.00 எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சந்தைப் பெறுமதி மற்றும் பௌதிக சோதனையின் அடிப்படையில் நியாயமான பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. Auto Mobile Association of Ceylon நிறுவனத்தினால் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

WP KJ – 3863 ஆம் இலக்க டொயோட்டா லேன்ட் குரூசர் ப்ராடோ (2010) ஜீப் வண்டி நிதி, பொருளாதார மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் பேரவையினால் இதன் உரிமையை கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அது பல்கலைக்கழகத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒட்டோ மொபைல் அசோஷியேசன் ஒப் சிலோன் (இலங்கை ஆட்டோ மொபைல் சங்கம்) மதிப்பீடு செய்யப்பட்டது. இந்த வாகனத்தின் பழுதுபார்ப்புச் செலவுகள் உட்பட அதன் பெறுமதி ரூபா 11,580,089.37 பெறுமதி

குறிப்பிடப்பட்டு ஜீப் வண்டி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.11.3 முழுமையாக மதிப்பிழந்த சொத்துக்கள் (பூச்சிய மதிப்புச் சொத்துக்கள்)

சொத்தொன்றின் மீதமுள்ள பெறுமதி மற்றும் பயன்மிக்க ஆயுட் காலத்தை குறைந்தது அனைத்து வருடாந்த அறிக்கையிடல் திகதியன்றும் மீளாய்வுக்குட்படுத்த வேண்டியுள்ளதுடன், எதிர்பார்ப்புக்கள் முன்னைய மதிப்பீடுகளைப் பார்க்கிலும் மாற்றமடைந்திருப்பின், இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 3 இற்கமைய (SLPSAS - 3) கணக்கீட்டு மதிப்பீட்டின் வேறுபாடொன்றாக மாற்றங்கள் கணக்கிடப்படும். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் (SLPSAS - 7) 65 ஆவது பந்திக்கமைய "கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் பிழைகளின் வேறுபாடுகள்" மானியங்கள் ஆணைக்குழுவின் 2011/03 மற்றும் 2014/03 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் பல்கலைக்கழக முறைமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விபரமான கணக்காய்வறிக்கையின் "1.4.2 - கணக்கீட்டு நியமம்" இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இந்த நியமத்திற்கமைய நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்மிக்க ஆயுட் காலம் சம்பந்தமாக கணக்குகள் மதிப்பீட்டை மாற்றியமைத்தமையின் காரணமாக மதிப்பீட்டு ரீதியிலான பிழைகள் ஏற்பட்டுள்ளது. இது தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் ஆண்டுதோறும் முழுமையாக மதிப்பிழந்த சொத்துக்களின் பயன்மிக்க ஆயுட் காலத்தை மதிப்பீடு செய்யாததன் பெறுபேறாகும்.

அதன்படி, பூச்சிய மதிப்பு உட்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்கள் மீள் மதிப்பீட்டுச் செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருப்பதுடன், அது 2022.12.31 ஆம் திகதியாகும்போதும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் முழுமையாக தேய்மானத்திற்குட்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பான பொழிப்புக்குக் கீழ் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் (SLPSAS - 7) 91 ஆவது பந்திக்கமைய 2022.12.31 ஆம் திகதியாகும்போது ரூபா **584,598,522.86** தொகை வெளிப்படுத்தப்படுகின்றது. பூச்சியப் பெறுமதி சொத்துக்கள் பற்றிய விபரம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வகை இல.	சொத்து வகைகள்	உண்மையான செலவு ரூபா
3	அலுவலக உபகரணங்கள்	158,139,256.14
4	பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திர சாதனங்கள்	1,914,107.90
5	ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்	293,507,144.07
6	தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள்	58,997,102.82
7	நூலகப் புத்தகங்கள்	49,684,265.53
9	விளையாட்டு உபகரணங்கள்	5,148,267.00
14	பட்டதாரி அங்கி மற்றும் நடன ஆபரணங்கள்	17,208,379.40
	மொத்தம்	**584,598,522.86**

2.11.4 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பூச்சியப் பெறுமதி சொத்துக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட தேய்மானப் பெறுமதி ரூபா 16,157,917.84 ஆக இருந்ததென்பதுடன், அது 2018 ஆம் ஆண்டில் கணக்குப் பதிவேடுகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

சொத்து வகைகள்	தேய்மானம் ரூபா
ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்	10,760,353.72
தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள்	805,316.93
நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள்	874,428.14
பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திர சாதனங்கள்	21,995.45
கட்டிடங்கள்	194,260.66
பட்டதாரி அங்கிகள் மற்றும் நடன ஆபரணங்கள்	1,205,076.96
அலுவலக உபகரணங்கள்	2,296,486.10
	16,157,917.84

நிலையான சொத்துக்கள் பதிவேடு இரண்டு கணனிமயப்படுத்தப்பட்ட பொதிகளில் (computerized packages) பேணி வரப்படுகின்றது. நிலையான சொத்துக்கள் தொடர்பான தரவுகள் 2015 ஆம் ஆண்டு வரை ஒரு தொகுப்பில் (பழைய பொதி) குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டு முதல் தரவுகள் புதிய தொகுப்பொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. பழைய தொகுப்பிலுள்ள அனைத்துத் தரவுகளும் 2018 இல் புதிய தொகுப்பொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், ஆரம்ப கொள்வனவுத் திகதியிலிருந்து அது செயற்படுத்தப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட தேய்மானங்கள் மீதும் இது பாதிப்புச் செலுத்துகின்றது.

2.14 நிதிச் சொத்துக்கள்

முதலீடுகள்

முதலீடுகள் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படுவதனைக் குறிக்கின்றது. இந்த முதலீடுகள் இலங்கை கணக்கீட்டு நியமம் 09 (SLFRS 09) இற்கமைய கணக்கில் பதியப்பட்டுள்ளது. நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படுதலானது SLFRS 09 இற்கமைய பெறுமதி தேய்மானதக் கிரயத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை முதலில் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுவதுடன் பின்னர் SLFRS 09 இற்கமைய பயனுள்ள வட்டி வீதத்தினைப் (effective interest rate) பயன்படுத்தி நியாயமான பெறுமதியிலும் குறைந்த பெறுமதி தேய்வின் அடிப்படையில் அளவிடப்படுகின்றது.

2.15 நடைமுறைச் சொத்துக்கள்

நிதி நிலைமைக் கூற்றில் வகையீடு செய்யப்பட்டுள்ள நடைமுறைச் சொத்து என்பது பல்கலைக்கழகத்தின் பொதுவான செயற்பாட்டு சுற்றினுள் அடைந்துகொள்வதற்கு அல்லது பயன்படுத்திக்கொள்வதற்கு எதிர்பார்ப்பவைகளாக இருப்பதுடன், அறிக்கைப்படுத்தும் தினத்திலிருந்து 12 மாதங்களுக்குள் கைத்தேறிய காசு அல்லது காசுக்குச் சமமானவைகளாகும்.

2.16 2.16 இருப்புக்கள்

இருப்புக்கள் கிரயத்திற்கமைய குறிப்பிடப்பட்டுள்ளதுடன் முதலில் வந்தது முதலில் செல்லல் (FIFO) அடிப்படையில் தீர்மானிக்கப்படும். இருப்பானது பிரதானமாக எழுது பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்களை உள்ளடக்கியதாக இருக்கும். பொருட்கள் இருப்பு பயன்படுத்துவதற்காகவன்றி மீள விற்பனை செய்வதற்கில்லை.

இருப்புப் பொருட்களில் மெதுவாக அசையும் உருப்படிகளின் (உ-ம்: புத்தகங்கள்) பெறுமதி ரூ. 1,092,714.11 மற்றும் அசையாத உருப்படிகளின் பெறுமதி ரூ. 67,066.68 நிதி ஒழுங்குவிதி 102 மற்றும் அரச துறை கணக்கீட்டு நியமம் 9 இற்கமைய பிரதான களஞ்சியசாலைகளின் வெளியீடுகளிலிருந்து பெறுமதியைக் குறைக்கும் அல்லது நட்டம் ஏற்படக்கூடிய நிகழ்தகவு இல்லாமையினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

பராமரிப்புப் பிரிவின் இருப்புப் பொருட்கள் வெவ்வேறாக கணக்கிடப்படும்.

VAPA அச்சகத்தின் புத்தகங்கள் இருப்பு விலைப் பெறுமதிக்கமைய இருப்புப் பொருட்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படுகின்றது. விற்பனை செய்து பணத்தை ஈட்டும் நோக்கில் VAPA அச்சகத்தின் புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

2.17 ஆளணிக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் கிடைக்க வேண்டியவைகள்

ஆளணிக்கான முற்பணங்கள் மற்றும் பெறப்பட வேண்டிய காசு, பண்டிகைக்கால முற்பணம் மற்றும் விசேட முற்பணம் (புத்தகங்கள் படிகள்) உள்ளடக்கப்படும்.

2.18 காசு மற்றும் காசுக்குச் சமமானவை

காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் என்றால் கையிருப்புக் காசு, தேவை வைப்புக்கள் மற்றும் குறுகிய கால திரவநிலை முதலீடுகள் அதாவது இலகுவாக காசாக மாற்றிக்கொள்ள முடியுமானவைகளாக இருப்பதுடன் சிறியளவிலான ஆபத்துக்குட்படக்கூடியவைகள் என வரைவிலக்கணப்படுத்தலாம். காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கங்களுக்காக காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் என்பதற்கு கையிருப்புப் பணமும் வங்கியிலுள்ள வைப்பும் உள்ளடங்கும். கையகப்படுத்திக்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து ஆறு மாத காலம் அல்லது அதனிலும் குறைவான குறுகிய கால முதிர்ச்சியுடனான முதலீட்டுப் பணமும் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளாக கருதப்படும்.

2.19 ஊழியர் அனுகூலங்கள் - வரையறை செய்யப்பட்டுள்ள அனுகூலத் திட்டமிடல்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 19 இன் பிரகாரம் ஒரு வருட சேவைக் காலத்தை நிறைவு செய்யும் அனைத்து ஊழியர்களுக்கும் ஓய்வூதிய பணிக்கொடைக்கான நிதி ஒதுக்கப்படும். 2019.06.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்பட்ட 05/2019 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய கல்விசார் ஆளணிக்காக செலுத்தப்படும் மாதாந்த இழப்பீட்டுப் படியை (MCA) பணிக்கொடை செலுத்துவதற்காக கணக்கிடுவதற்காக கவனத்திற்கொள்ளப்பட்டது.

பணிக்கொடைக்கான நிதி ஏற்பாட்டைக் கணக்கிடுவதற்காக தயாரிக்கப்பட்ட கழிவு வீதம் கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தயாரிக்கப்பட்ட கழிவு வீதத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பிணைப் பத்திர அனுகூலத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

2.20 பொறுப்புக்கள் மற்றும் நிதி ஏற்பாடு

நடைமுறைப் பொறுப்புக்கள்

நடைமுறைப் பொறுப்புக்களை அவற்றின் ஏட்டுப் பெறுமதிக்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதி ஏற்பாடு

கடந்த கால நிகழ்வொன்றின் பெறுபேறாக பல்கலைக்கழகத்திற்குரிய கடப்பாடுகள் (சட்ட ரீதியிலான மற்றும் ஆக்கபூர்வமான) காணப்படும்போது நிதி ஏற்பாடு இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்த பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக பொருளாதார ரீதியிலான அனுகூலங்களைக் கொண்ட வளங்கள் வெளிச் செல்லல் வேண்டுமென்பதுடன் நம்பகமான மதிப்பீடொன்றை தயாரிக்க முடியும்.

நிச்சயமற்ற பொறுப்புக்கள் மற்றும் நிச்சயமற்ற சொத்துக்கள்

நிச்சயமற்ற பொறுப்பு என்றால், செயற்பாட்டுக் கட்டுப்பாட்டை விஞ்சிச் சென்ற நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வொன்று அல்லது அதிக எண்ணிக்கையிலான நிகழ்வுகள் அல்லது தொடர்ச்சியாக நிலவுதல் அல்லது அது ஏற்பட முடியாதென்பதனால் இனங்கண்டுகொள்ளப்படாத நிகழ்கால பொறுப்பொன்றான கடந்த கால நிகழ்வுகளினூடாக எழும் பொறுப்பாகும். பொறுப்பை தீர்ப்பதற்காக வளங்கள் உள்வரல் அவசியமாகும்.

நம்பிக்கையுடன் அளவிட முடியாத பொறுப்பொன்றையுடைய மிகவும் அரிதான சந்தர்ப்பங்களிலும் தொடர்ச்சியான பொறுப்பொன்றாக இனங்கண்டு கொள்ளப்படாதிருப்பதுடன் நிதிக் கூற்றில் அதன் இருப்பு வெளிப்படுத்தப்படும்.

நிச்சயமற்ற பொறுப்பு என்றால், பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டை விஞ்சிச் சென்ற நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வொன்று அல்லது அதிக எண்ணிக்கையிலான நிகழ்வுகள் அல்லது நிகழ்வுகளினூடாக எழக்கூடிய சொத்தாகும். பல்கலைக்கழகத்தின் நிச்சயமற்ற சொத்துக்கள் இனங்கண்டுகொள்ளப்படாதிருப்பதுடன், பொருளாதார அனுகூலங்கள் உள்வருவதற்கு வாய்ப்பிருப்பினும் நிச்சயமற்ற அதன் இருப்பை வெளிப்படுத்துகின்றது.

2.21 வருமானங்களை இனங்காணல்

அரசாங்கத்தின் மீண்டெழும் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றது. மாணவர்களிடமிருந்து அறவிடப்படும் பாடநெறிக் கட்டணங்கள் அறவிடப்படும்போதே வருமானமாக கணக்கீடு செய்யப்படுகின்றது. முதலீட்டின் அடிப்படையிலான வட்டி அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுய நிதி அடிப்படையில் நடாத்தப்படும் பாடநெறிகளுக்காக மாணவர்களிடமிருந்து அறவிடப்படும் பாடநெறிக் கட்டணங்கள் உரிய பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் பாடநெறியின் காலத்தை அடிப்படையாகக்கொண்டு நீக்கப்படும்.

நிதிசார் வருமானம்

இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் (SLPSAS) இல்லாமையின் காரணமாக இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமம் 09 (SLFRS 09) இற்கமைய பயன்மிக்க வட்டி வீத முறையொன்றைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் வட்டி வருமானம் இனங்கண்டு கொள்ளப்படும்.

2.22 செலவுகளை இனங்காணல்

நிதிச் செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செலவுகள் அந்த செலவுகளின் தன்மையை அடிப்படையாகக்கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆண்டின் மேலதிகத்தை கணக்கிடும்போது இளமாணிப் பட்டத் தேர்வுநாடிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செலவுகளும் அரசாங்கத்தின் மீண்டெழும் உதவிகளிலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டுள்ளது.

2.23 திறந்த மற்றும் தொலைக் கல்விப் பிரிவு (CODL)

முழுமையான சுய நிதி அடிப்படையில் "திறந்த மற்றும் தொலைக் கல்வி மையம் (CODL)" என தனியான பிரிவொன்று பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பிரிவுக்காக முதலில் தனியான நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் அவை பல்கலைக்கழகத்தின் மொத்த நிதிக் கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

932 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய CODL இன் நிதியைப் பயன்படுத்திக்கொள்வதற்கு CODL இனால் துணைச் சட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்காக நிதியத்தின் செலவுகள் நிதியத்தின் வருமானக் கணக்கிற்கு மாற்றப்படும். ஆண்டினுள் நிதியத்தின் செலவு ரூ. 936,848.00 ஆகும்.

CODL இன் வருமானம் கீழே குறிப்பிடப்பட்ட பிரகாரம் கால அடிப்படையில் வேறுபடுகின்றது. (2023 ஆம் ஆண்டில் பாடநெறிகளை நிறைவு செய்வதற்கு தேவையான மாதங்களின் எண்ணிக்கை)

	வரைதல் (டிப்ளோமா) 2019/20(2)	நடனம் (டிப்ளோமா) 2020/21	குரல் இசை (டிப்ளோமா) 2020/21	வரைதல் (டிப்ளோமா) 2022/2023	பட்டப் படிப்பு / மீள் பரீட்சை	மொத்தம்
ஒத்தி வைக்கப்பட்ட வருமானம் B/F	1,680,000	1,263,878	1,145,001	2,453	-	4,091,332
ஆண்டின் பாடநெறி வருமானம்	624,000	830,000	244,000	2,610,080	510,000	4,818,080
மொத்தம்	2,304,000	2,093,878	1,389,001	2,612,533	510,000	8,909,412
ஒத்தி வைக்கப்பட்ட வருமானம்	**576,000**	**872,449**	**578,750**	**1,959,400**	**510,000**	**4,496,599**
	3 மாதங்கள் முன்னால்	**5 மாதங்கள் முன்னால்**	**5 மாதங்கள் முன்னால்**	**9 மாதங்கள் முன்னால்**	**பரீட்சைகள் நடாத்தப் படவில்லை**	

பொதுத் திறைசேரியினால் எதிர்பார்க்கப்பட்ட மீண்டெழும் அளிப்புக்கள் வழங்கப்படாமையின் காரணமாக தவிர்க்க முடியாத மீண்டெழும் செலவுகளை மேற்கொள்வதற்காக பல்கலைக்கழகத்தினால் CODL இடமிருந்து 10 மில்லியன் ரூபா தொகை மீளச் செலுத்தல் நிபந்தனையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட தொகையில் 2 மில்லியன் ரூபா 2022.12.31 ஆம் திகதியன்று CODL இற்கு மீளச் செலுத்தப்பட்டுள்ளது. ஆயினும் இந்த மீளச் செலுத்தல் பற்றி CODL கணக்குப் பதிவேடுகளில் குறிப்பிடப்படவில்லை.

2.24 பட்டப்பின் படிப்பு கற்கைப் பிரிவு

சுய நிதி அடிப்படையில் பட்டப்பின் படிப்பு கற்கைப் பிரிவு என தனியான பிரிவொன்று பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்றது. இந்தப் பிரிவுக்காக முதலில் தனியான நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டு பின்னர் அது பல்கலைக்கழகத்தின் மொத்த நிதிக் கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2.25 மூலதன / அபிவிருத்தி உதவியின் கீழ் பெறப்பட்ட விசேட உதவிகளை கணக்கு வைத்தல்

திறைசேரியிடமிருந்து விசேட செயற் திட்டங்களுக்காக கிடைக்கும் மூலதன நிதி ஏற்பாடுகள் முதலில் செலவிடப்படாத மூலதன உதவியின் கீழ் கணக்கு வைக்கப்படும். இந்த நிதியிலிருந்து மீண்டெழும் தன்மையைக்கொண்ட அலுவல்களுக்கு செலவு செய்யும்போது அந்தத் தொகை நிதிச் செயலாற்றுகை அறிக்கையில் மீண்டெழும் கிடைப்பனவு மற்றும் செலவாகக் குறிப்பிடப்படுகின்றது.

2.26 <u>"நிலையான சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாடு" இன் கீழ் கிடைக்கப்பெற்ற மூலதன உதவிகளைக் கணக்கு வைத்தல்</u>

மூலதனச் செலவாகக் கருத முடியுமான செலவுகள் மாத்திரம் மூலதனப்படுத்தப்படுவதுடன் ஏனைய செலவுகள் நடப்பு ஆண்டின் நிதிச் செயலாற்றுகை அறிக்கையில் செலவாகக் குறிப்பிடப்பட்டு பதிவழிப்புச் செய்யப்படும்.

2.27 <u>தொடர்புடைய தரப்பினர் சம்பந்தமாக வெளிப்படுத்தல்</u>

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் வழிகாட்டலின் கீழ் கொள்கை அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு இணையத்தள வசதிகள் LEARN நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எமது பல்கலைக்கழகத்தின் நடனம் மற்றும் நாடக பீடத்தின் சிரேட்ட விரிவுரையாளரான திருமதி அனுஷா ஜயசிரி அவர்கள் LEARN நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக அலுவல் மேற்கொண்டு வருகின்றார். அந்த விரிவுரையாளரால் ஆற்றப்படும் சேவைக்காக பல்கலைக்கழகத்தினால் அல்லது LEARN நிறுவனத்தினால் எந்தவிதமான ஊதியமும் செலுத்தப்படுவதில்லை.

2.28 <u>காசுப் பாய்ச்சல் கூற்று</u>

SLPSAS 2 இற்கமைய மறைமுக முறையை அடிப்படையாகக்கொண்டு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக செயற்பாட்டு நடவடிக்கைகள், நிதிசார் செயற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான காசு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளில் இனங்கண்டுகொள்ளப்படும். காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் என்பது குறுகிய கால உயர் திரவத் தன்மையைக் கொண்ட முதலீட்டை உள்ளடக்கியதாகும். அவற்றை இலகுவில் காசாக மாற்றிக்கொள்ள முடியுமென்பதுடன் பெறுமதி மாற்றம் எனும் சிறிய ஆபத்துக்குட்பட்டதாகும்.

2.29 பல்கலைக்கழகத்தின் வசமிருந்த மற்றும் கையகப்படுத்திக்கொள்ளப்பட்ட காணிகள் சம்பந்தமான விபரம்

காணியின் பெயர்	தற்போதைய நிலைமை
இலக்கம் 21, அல்பிரட் கிரசன்ட்	அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய, 4/10/41274 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தினூடாக பல்கலைக்கழகத்திற்காக சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளது.
இலக்கம் 21/1 அல்பிரட் கிரசன்ட்	அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் 2013 நவம்பர் 19 ஆம் திகதிய, 4/3/9908 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தினூடாக பல்கலைக்கழகத்திற்காக சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளது.
இலக்கம் 46, ஹோர்ட்டன் பிளேஸ்	அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் சுவீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
இலக்கம் 146, அனகாரிக தர்மபால மாவத்தை, தெஹிவளை	அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் சுவீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
இலக்கம் 137, வளவ்வத்தை, ராஜகிரிய	அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் சுவீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2.30 பிணை முறி மீறல்கள் பற்றிய விபரம்

பெயர் : திரு.எஸ்.எம்.கோட்டெகொட

அறவிட்டுக்கொள்ள வேண்டிய தொகை : ரூ. 1,953,638.96

தற்போதைய நிலைமை : குறித்த தொகையை மீளச் செலுத்துமாறு 2020.09.29 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக சேமலாப நிதியத் (UPF) தொகை மீளச் செலுத்தப்பட்டுள்ளது. பிணைமுறித் தொகையை 48 தவணைகளில் செலுத்தித் தீர்ப்பதற்கு கவுன்சிலினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தத்திற்கமைய 2022 யூன் மாதம் முதல் மாதாந்த தவணைத் தொகை செலுத்தப்படுகின்றது.

பெயர் : திருமதி பீ.கே.டப்ளியு.எம்.விஜேகுணசேக்கர

அறவிட்டுக்கொள்ள வேண்டிய தொகை : ரூ. 1,271,568.00

சேமலாப நிதியத்தின் மீதி : ரூ. 148,438.31

தற்போதைய நிலைமை : கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் DMR/1853/2019 மற்றும் DMR/1852/2019 இலக்கங்களின் கீழ் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், பிரதான கடனாளியினால் தீர்வு முன்மொழியப்பட்டு 2020.12.17 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழகப் பேரவையின் 178 ஆவது கூட்டத்தின்போது அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இந்த விடயம் செயற்பாட்டிலுள்ளது.

2022 ஆம் ஆண்டில் ரூ. 1,700,034.21 தொகை மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

2.31 ஏனையவை

2.31.01 VAPA பல்கலைக்கழக அச்சகம்

கவுன்சிலின் 180 ஆவது கூட்டத்தின்போது கவுன்சிலின் அங்கீகாரத்துடன் கல்விசார் மற்றும் படைப்பாற்றல் மிக்க நூல்களை வெளியிடுவதற்காக "VAPA பல்கலைக்கழக அச்சகம்" எனும் பெயரில் தனியான பிரிவொன்று 2021 இல் தாபிக்கப்பட்டது. VAPA பல்கலைக்கழக அச்சகத்தினால் பதினொரு நூல்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதுடன் அச்சிடப்பட்ட நூல்கள் பல்கலைக்கழக களஞ்சியசாலைக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. கொடுக்கல்வாங்களல்கள் "VAPA பல்கலைக்கழக அச்சகம்" கணக்கில் பதியப்பட்டுள்ளதுடன், அச்சிடப்பட்ட நூல்களின் மீதி பற்றிய விபரங்கள் இருப்புப் பொருட்கள் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது (ரூ.1,863,043.31). VAPA பல்கலைக்கழக அச்சகத்தின் கொடுக்கல்வாங்கல்கள் பற்றி 2022 ஆம் ஆண்டில் அறிக்கைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும், 2023 ஆம் ஆண்டில் தனியான கணக்குப் பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளது.

2.31.02 VAPA தொலைக்காட்சி

VAPA தொலைக்காட்சி 2022 ஆம் ஆண்டில் கவுன்சிலின் அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்பட்டதுடன், இது நுண்கலைக் கல்வியை முக்கிய நோக்கமாகவும், பொழுதுபோக்கினை துணை நோக்கமாகவும் கொண்டு பொது மக்களின் மிக உயர்ந்த அழகியல் இரசனையை பிரபல்யப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. VAPA தொலைக்காட்சியின் அடிப்படை நோக்கம், கட்புல மற்றும் ஆற்றுகைக் கலைகளின் பாடம் - சிறப்பு அறிவு மற்றும் பயன்பாடுகளை மேம்படுத்துவதாகும். அலைவரிசையானது பல்கலைக்கழகத்தின் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டைப் போன்றே அறிவு மற்றும் ஆற்றல்களை மக்களிடம் பரப்பும் பணியையும் மேற்கொள்கின்றது. இது வார நாட்களில் மு.ப. 7.00 மணி முதல் பி.ப.7.00 மணி வரையும் வார இறுதி நாட்களில் காலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் ஒளிபரப்பாகின்றது. 2022.12.31 ஆம் திகதியன்று 115 பட்டத் தேர்வுநாடிகளுக்கு தளப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. கொடுக்கல்வாங்கல்கள் பல்கலைகழக கணக்குப் பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளது.

எச்ஈஉ/பீ/யூவீபீஏ/2022/எப்ஏ/06 2023 யூலை 04 ஆம் திகதி.

உப வேந்தர்
அழகியற் கலை பல்கலைக்கழகம்

அழகியற் கலை பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

அழகியற் கலை பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீடுட்டுக் கொள்கைகளினையும், பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆணடின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தில் 107(5) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களில் 2022 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 பல்கலைக்கழகத்தின் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட பல்கலைக்கழகத்தின் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிராத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதன் பொருள்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்பட்டிராததுடன், நான் அது தொடர்பாக எவ்விதத்திலும் சான்றுறுதிப்படுத்தல் அல்லது அபிப்பிராயமொன்றை கூறவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்கு உரிய, எனது பொறுப்பாக காணப்படுவது மேலே அடையாளங் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெறக் கூடியதாக இருக்கும் போது வாசிப்பு மற்றும் அவ்வாறு மேற்கொள்ளும் போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகைகளில் பெறப்பட்ட எனது அறிவிற்கெட்டியதன் பிரகாரம் போதுமான வகையில் பொருத்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்வதேயாகும்.

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட ஏனைய தகவல்களின் அடிப்படையில் மற்றும் என்னால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையாக பிழையாகக் காட்டப்பட்டுள்ளது என நான் முடிவு காண்பதானது அந்த விடயங்களை என்னால் அறிக்கையிடுவது அத்தியவாசியமானது என்பதனாலாகும். இது சம்பந்தமாக நான் அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலாரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமான நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்தில் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைக்குட்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை பல்கலைக்கழகம் பேணி வந்திருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்திருந்தது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான வரையறைகளுக்குள் பின்வருவன சொல்லக்கூடிய அளவிற்கு வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையின் அங்கத்தவர்கள் எவருக்கும் பல்கலைக்கழகம் சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது பல்கலைக்கழகத்தின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் இணங்காதாக நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக,

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிக்கிணங்க பல்கலைக்கழகத்தின் வளத்தை சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக கால வரையறைக்குள் உரிய சட்டங்கள், விதிகளுக்கு இணங்க பெறுகைக்குட்படுத்தி பாவனைக்குட்படுத்தபட்டிராமை.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2 வருடங்களுக்கும் 11 வருடங்களுக்கும் இடையிலான காலத்திலிருந்து காணப்படுகின்ற கூட்டு மொத்தம் ரூபா 61 598 913 ஆன வைப்புகள் மற்றும் தடுத்து வைக்கப்பட்ட மீதிகள் இரண்டு வருடங்களிலும் பழைய கூட்டு மொத்தம் ரூபா 43 472 497 ஆன செலுத்தப்பட வேண்டிய மீதிகள் மீளாய்வாண்டிலும் தீர்க்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) ஒப்பந்தம் மற்றும் பிணை முறியை மீறிய இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 3 225 207 மீளாய் வாண்டிலும் அறவிட்டுக் கொள்வதற்கு தவறியிருந்தது.

(இ) 2010 ஆம் ஆண்டிலிருந்து நிதி கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 1,022,650,000 பெறுமதியான 03 காணித் துண்டுகளை பல்கலைக்கழகத்திற்கு சட்ட ரீதியாக உரித்தாக்கிக் கொள்வதற்கு மீளாய்வாண்டிலும் தவறியிருந்தது.

(ஈ) சிற்றுண்டி சாலை உபகரணங்களை கொள்வனவு செய்யும் பெறுகையின்போது பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 7.8.7 பந்தியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் கேள்வி மதிப்பீட்டின் போது விவரக்குறிப்பு விபரமான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக விவரக்குறிப்பிற்கு இணக்கம் இல்லாத ரூபா 1,018,500 பெறுமதியான 3 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

සෞන්දර්ය කලා විශ්වවිද්‍යාලය
கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF THE VISUAL & PERFORMING ARTS
21, Albert Crescent, Colombo 07, Sri Lanka
Tel. : +94 112 033 710 Fax : +94 112 696 972
E-mail : info@vpa.ac.lk Web. : www.vpa.ac.lk

INTERNAL AUDIT UNIT
21, Albert Crescent, Colombo 07, Sri Lanka
Tel. : +94 112 026 785 / 6
Fax : +94 112 696 972
E-mail : auditor@vpa.ac.lk

මගේ අංකය : My No : UVPA/IA/NAO/2022

ඔබේ අංකය : Your No. :

දිනය : Date : 2023.07.21

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

2.3 ஏனைய விடயங்கள்

(அ) நடைமுறை பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட மூலதனத் தொகை ரூ. 60,463,044 மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட மீண்டெழும் தொகை ரூ. 853,870 என இரண்டு கணக்குகளிலும் பழைய சில மீதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு கணக்குகளையும் பரீட்சித்து பழைய மீதிகளை அடையாளங்கண்டு அந்தப் பெறுமதியை தீர்த்தலுடன் தொடர்பான அலுவல்கள் 2023 நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கேள்வி வைப்புக்கள் / பாதுகாப்பு வைப்புக்கள் / Art Gallery வைப்புக்கள் குறித்த அந்த அலுவல்கள் நிறைவடைந்ததன் பின்னர் பிடிமானத் தொகையை விடுவிக்குமாறு வைப்புச் செய்தவர்களால் மேற்கொள்ளப்படும் கோரிக்கைக்கமையவே தீர்க்கப்படுகின்றன. அந்தக் கோரிக்கையை வைப்புச் செய்தவர்களே முன்வைத்தல் வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படாத வைப்புக்கள் இந்தக் கணக்குகளில் முன்கொண்டுசெல்லப்பட்ட மீதிகளாக நிலவுகின்றன. அத்தோடு நிதி ஒழுங்குவிதிகளுக்கமைய இரண்டு வருடங்களிலும் அதிகமான பழைய வைப்புக்களை பல்கலைக்கழத்தின் வருமானத்தில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களிலும் அதிகமான பழைய செலுத்த வேண்டிய மீதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 43,472,497 பெறுமதி திருத்தப்பட்ட இறுதிக் கணக்கறிக்கைக்கமைய ரூ. 148,985,394 என சரிசெய்யப்படல் வேண்டும். இதற்கான காரணம், 2022.12.31 ஆம் திகதியன்று பணிகள் நிறைவு செய்யப்பட்டு கையளிக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் தொடர்பான ஒப்பந்தப் பணிகளுக்காக செலுத்த வேண்டிய பெறுமதி ரூ. 124,079,265 கணக்கில் பதியப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் பிழையாக கணக்கில் பதியப்பட்டிருந்த செலுத்தப்பட வேண்டிய ரூ. 23,286,880 கணக்குகளிலிருந்து நீக்கி சரிசெய்வதாகும். மேலும் மகாபொல புலமைப்பரிசில் (செலுத்த வேண்டியுள்ள) என குறிப்பிடப்பட்டுள்ள மீதி நீண்ட காலமாக நிலவிவரும் மீதியாகும். அந்தக் காலப் பகுதியினுள் மகாபொல புலமைப்பரிசில் செலுத்துவதற்காக மகாபொல நம்பிக்கை நிதியத்திலிருந்து நிதி கிடைத்துள்ளதுடன் கொடுப்பனவுகளை மேற்கொண்டதன் பின்னர் மீதித் தொகை மற்றும் பெற்றுக்கொள்ளாத மகாபொல தவணைத் தொகை இந்தக் கணக்கில் காணப்படுகின்றது. 2023 நிதியாண்டில் இந்த மீதி தொடர்பாக ஆராய்ந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) ஒப்பந்தங்கள் மற்றும் பிணைமுறிகளை மீறிய இரண்டு அலுவலர்கள் பற்றிய தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் இல. 2.32 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

திரு. எஸ்.எம்.கோட்டேகொட

அறவிடப்பட வேண்டிய தொகை - ரூ. 3,470,737

சேமலாப நிதியத்திலிருந்து அறவிடப்பட்ட தொகை - ரூ.1,402,900

2022.06.22 முதல் தவணைத் தொகைகளாக செலுத்தியுள்ள தொகை - ரூ. 459,642

தற்போது அறவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ.1,862,543

அறவிடப்பட வேண்டியுள்ள மீதித் தொகை - ரூ.1,608,195

திருமதி பீ.கே.டப்ளியு.எம்.விஜேகுணசேக்கர

அறவிடப்பட வேண்டிய தொகை - ரூ. 1,271,568

சேமலாப நிதியத்தின் மீதி: ரூ. - 148,438

பெறுமதி தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இலக்கங்கள்: DMR/1853/2019 மற்றும் DMR/1852/2019 இன் கீழ் ஒப்பந்தங்கள் மற்றும் பிணைமுறிகளை மீறிய அலுவலர் மற்றும் அவருடைய பிணையாளிகளுக்கு எதிராக வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(இ) இதற்கான பதிலாக சட்டம் மற்றும் ஆவணங்கள் திணைக்களத்திடமிருந்து அனுப்பப்பட்டுள்ள ஆவணத்தை இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன். **(இணைப்பு 01)**

(ஈ) இந்த விலைமனுக் கோரலுடன் தொடர்பான இணக்கப்பாட்டு அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்காவிட்டாலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விலைமனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட அனைத்து விலை அளவுகள் மற்றும் ஒவ்வொரு விலைமனுவிலும் உள்ளடக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப விபரக் குறிப்புக்கள் கவனத்திற்கொள்ளப்பட்டன. மேலும், கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் எதிர்கால பெறுகைகள் கோப்புக்களுக்கான விலை ஒப்பீடுகளுக்கு மேலதிகமாக தொழில்நுட்ப மற்றும் வர்த்தக ரீதியிலான ஒத்திசைவு குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களையும் ஏற்புடைய பிரகாரம் உள்ளடக்குவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கிடைக்கப்பெற்ற அனைத்து விலைமனுக்களும் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டதுடன் குறித்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் செலுத்தப்படும் தொகைக்கு உச்சளவு பெறுமதி(Value for Money) வழங்கப்படும் ஒப்பீட்டு ரீதியில் சிறப்பான வகையில் பதிலளித்துள்ள விலைமனுதாரர்களை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்துள்ளது. அதன்போது பெறுகைகள் வழிகாட்டி 7.8.3 மற்றும் 7.8.6 பிரகாரம் தொழில்நுட்ப விவரக் குறிப்புக்களிலிருந்து சிறியளவில் வெளியேறல் மற்றும் அளவு ரீதியில் கணக்கிட்டு பெறுமதியொன்றை வழங்க முடியுமான வெளியேறல்கள், சிறியளவிலான வெளியேறல்கள் என தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவினால் கவனத்திற்கொள்ளப்பட்டு அந்த சிறியளவிலான வெளியேறல்கள் பணிகளில் அந்த விடயத்தின் தரம் அல்லது செயலாற்றுகைக்கு ஏதேனுமொரு வகையில் போதுமானளவில் தாக்கத்தை ஏற்படுத்தாமையின் காரணத்தினால் Display Cupboard மற்றும் Bain marie table இற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் வழங்கப்பட்டன. மேலும், Food Trolly இற்காக கோரப்பட்டிருந்த அனைத்து தொழில்நுட்ப விவரக் குறிப்புக்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் சமர்ப்பித்திருந்த உருப்படி (Item) இயைந்திருந்தமையினால் அந்த உருப்படியை தொழில்நுட்ப விவரக் குறிப்புக்களுக்கமைய கொள்வனவு செய்யப்பட்டது. இது தவிர குறைந்த விலை அளவுகளை முன்வைத்திருந்த விலைமனுதாரரின் விலை அளவுகள் சந்தை விலைகளுடன் பொருந்துவதனால் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் குறைந்த விலையை முன்வைத்திருந்த விலைமனுதாரரிடமிருந்து தகவுப் பொருத்த அளவு (proportion) உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்தோடு குறித்த விலைமனுதாரர் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்திற்கமைய விலை விகிதாசாரங்கள் மற்றும் விவரக் குறிப்புக்களுக்கமைய பல்கலைக்கழகத்திற்கு தற்போது பொருட்கள் வழங்கப்பட்டு குறித்த கொள்வனவு ஆணை உரிய பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பேராசிரியர் ரோஹண பீ.மஹலியனாரச்சி
துணைவேந்தர்

සෞන්දර්ය කලා විශ්වවිද්‍යාලය
கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF THE VISUAL & PERFORMING ARTS
21, Albert Crescent, Colombo 07, Sri Lanka
Tel. : +94 112 033 710 Fax : +94 112 696 972
E-mail: info@vpa.ac.lk Web. : www.vpa.ac.lk

LEGAL & DOCUMENTATION DIVISION
21, Albert Crescent, Colombo 07, Sri Lanka
Tel. : +94 112 026 788
Fax : +94 112 696 972
E-mail : legal.doc@vpa.ac.lk

මගේ අංකය: / My No : UVPA/LE/audit-01

ඔබේ අංකය: / Your No :

දිනය: / Date: 2023.07.20

பிரதி உள்ளக கணக்காய்வாளர்,
உள்ளக கணக்காய்வுப் பிரிவு.

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தினால் அனுபவிக்கப்படும் காணிகள் தொடர்பாக 2023.07.20 ஆம் திகதியன்று நிலைமை.

காணி	தற்போதைய நிலைமை
46, ஹோட்டன் பிளேஸ் காணி	2023.05.25 ஆம் திகதிய கடிதத்தில் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரால் இந்தக் காணியை சுவீகரத்துக்கொள்வதற்கான ஆரம்ப நோக்கம் திருத்தியமைக்கப்பட்ட ஆவணம் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக காணி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
இல. 137, வளவ்வத்த, ராஜகிரிய காணி	இந்தக் காணியை பல்கலைக்கழகத்திற்கு சட்ட ரீதியாக உரிமை மாற்றம் செய்வதற்கான கல்வி அமைச்சரின் பரிந்துரை 2022.11.25 ஆம் திகதி சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக 2022.12.05 ஆம் திகதி கல்வி அமைச்சின் கடிதத்தினூடாக அறிவிக்கப்பட்டுள்ளது. உரிமை மாற்றல் அலுவல்களை துரிதப்படுத்தித் தருமாறு 2023.05.02 ஆம் திகதி பல்கலைக்கழகத்தினால் காணி அமைச்சுக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.
இல. 146, அநாகரிக தர்மபால மாவத்தை, தெஹிவளை	2023.05.19 ஆம் திகதி தெஹிவளை பிரதேச செயலாளரால் காணிகள் பதிவாளர் அலுவலகத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டு இந்தக் காணியுடன் தொடர்புடைய 4/3/10142 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தை பதிவுசெய்து அதன் பிரதியொன்றை துரிதமாக பிரதேச செயலாளரக்கு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அது இதுவரை அந்த அலுவலகத்திற்கு கிடைக்கவில்லை.

இப்படிக்கு - உண்மையுள்ள,

உதவிப் பதிவாளர்
சட்டம் மற்றும் ஆவணங்கள் பிரிவு